FTM

முதல் பருவ தொகுத்தறித் தேர்வு – 2023

6 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 2.00 மணி | மதிப்பெண்கள் : 60

## பகுதி - 1 பிரிவு - 1

**அ. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமானவற்றை தேர்வு செய்க.** 5 X 1 = 5

1. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ............. ஆக இருக்கும்.
   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) அசதி ஈ) வருத்தம்
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ................ சுருங்கி விட்டது.
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
3. மா என்னும் சொல்லின் பொருள் ................ .
   அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா
4. கதிரவனின் மற்றொரு பெயர் .................. .
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) சனி
5. உடல் நோய்க்கு ................ தேவை.
   அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

## பிரிவு - 2

**ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 X 1 = 5

6. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ................ .
7. பறவைகள் இடம் பெயர்வதற்கு .............. என்று பெயர்.
8. மனிதன் தன் வேலைகளை எளிதாக்க கண்டுபிடித்தவை ............... .
9. சோபியா ரோபோவுக்கு குடியுரிமை வழங்கிய நாடு ..................... .
10. இந்தியாவின் பறவை மனிதர் ................... .

## பிரிவு - 3

**இ. பொருத்துக.** 4 X 1 = 4

11. விளைவுக்கு - பால்
12. அறிவுக்கு - வேல்
13. இளமைக்கு - நீர்
14. புலவர்க்கு - தோள்

## பகுதி - 2

**ஈ. பின்வரும் மொழிப்பயிற்சி வினாக்கள் அனைத்துக்கும் விடையளி.** 6 X 1 = 6

15. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க. - **பிறமொழிக் கலப்பின்றி எழுதுக.**
16. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துக்கள் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக. ***கவிதை, பரிபாடல்.***

17. **பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பு.**

இனிய .................. இன்னாத கூறல்

கனியிருப்பக் ............... கவர்ந்தற்று.

18. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. *நாள்தோறும், மலர்.*

19. **பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

முத்து தம் ................. காரணமாக ஊருக்குச் சென்றான். *(பனி / பணி)*

20. பின்வரும் சொல்லுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடித்து எழுதுக.

*நுண்ணறிவு, தொழிற்சாலை.*

## பகுதி - 3

**உ. பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி.**

21. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை? 5 X 2 = 10
22. மெய்யெழுத்தின் மூவகை இனங்களை வகைப்படுத்தி எழுதுக.
23. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயருகின்றன?
24. எழுத்துக்குத் தொடக்கமாக அமைவது எது?
25. மனிதர்களுக்கு மருந்தாக விளக்குவது எது?
26. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
27. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

**ஊ. பின்வரும் வினாக்களுக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் வின்டயளி.**

28. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து எழுதுக. 3 X 4 = 12
29. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
30. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
31. எந்திர மனிதனின் பயன்கள் கூறுக.
32. காணி நிலம் பாடலில் பாரதியார் தனக்கு எவையெல்லாம் வேண்டும் என குறிப்பிடுகிறார்?

## பகுதி - 4

**எ. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** 2 X 6 = 12

33. கிழவனும் கடலும் படக்கதையை உன் சொந்த நடையில் எழுதுக. *(அல்லது)*
சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல் கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
34. விடுமுறை விண்ணப்பம் எழுதுக. *(அல்லது)*
இயற்கையை காப்போம் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பகுதி - 5

**ஏ. பின்வரும் வினாக்களுக்கு செய்யுள் வடிவில் விடையளிக்க.** 4 + 2 = 6

35. தமிழுக்கு அமுதென்று பேர் - எனத் தொடங்கும் இன்பத் தமிழ் பாடலை எழுதுக.
36. இனிய உளவாக எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.